பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 11 | வெள்ளிக்கிழமை | 27.09.2024 | அதிர்வு 056

## தமிழர் தலைநகரில் நேற்று திலீபனின் நினைவேந்தல்!



(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

# சின்னம் தெரிவில் முரண்பாடு

## தீர்மானமின்றி முடிவடைந்த பொதுக் கட்டமைப்பு பேச்சு



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியப்பொதுக்கட்டமைப்பாகப் போட்டியிடுவது தொடர்பில் அரசியல் கட்சியினருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் இழுபறியில் முடிவு எட்டப்படாமல் முடிவுறுத்தப்பட்டுள்ளது. 06

## அநுரவை வாழ்த்திய அமெரிக்க ஜனாதிபதி





ஜனாதிபதித் தேர்தலில் வென்ற இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



'பெர்மிட்' பெருச்சாளிகளின் பெயர்ப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசில் மதுபானசாலை அனுமதி பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"மூன்று கோடி ரூபா முதல் 4 கோடி ரூபாவுக்கு மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்தவர்கள் உள்ளனர்.

"அவர்களின் விவரங்கள் எம்மிடம் உள்ளன. அவற்றை விரைவில் வெளியிடுவோம். 06



# யாழ். பல்கலைக்கழகத்தில் திலீபனின் நினைவேந்தல்

ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணா விரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவேந்தல் நேற்று வியாழக் கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற் றது.
















# தமிழர் தலைநகரில் நேற்று திலீபனின் நினைவேந்தல்!

ஈழத்தமிழர்களின் விடிவுக்காக தன் இன்னுயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வடக்கு – கிழக்கில் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில் தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவன் கோயில் முன்றலில் தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து தியாகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இராவண சேனையினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் பலரும் கலந்துகொண்டனர்.










# நாடாளுமன்றத் தேர்தலில் விக்கி போட்டியிடமாட்டார்

## கட்சிக் கூட்டத்தில் அவரே தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதியன்று தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சியினரிடையே நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவலை விக்னேஸ்வரன் தெரிவித்தார் என்று அறியமுடிகின்றது.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அரசியலில் பிரவேசித்து வடக்கு மாகாண முதலமைச்சராகத் தெரிவான விக்னேஸ்வரன், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.



## நாடாளுமன்றம் கலைப்பு:

# ஓய்வூதிய வாய்ப்பைத் தவறவிட்ட 85 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நாடாளுமன்ற காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதியினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 85 பேருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு இல்லாமல் போயுள்ளது.

1977ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியக் கொடுப்பனவு சட்டத்துக்கு அமைய, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற வேண்டுமாயின் நாடாளுமன்ற உறுப்பினராக 5 வருடங்கள் செயற்பட்டிருக்க வேண்டும்.

அதேநேரம் 9 ஆவது நாடாளுமன்றம் உத்தியோகப்பூர்வமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி காலாவதியாகும். எனினும் அதற்கு முன்னதாக நாடாளுமன்றம் ஜனாதிபதியினால் கலைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் உட்பட 85 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் போயுள்ளது.

அதேநேரம், 5 ஆண்டுகள் நிறைவடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அவர் பெறும் வேதனத்தில் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்படும்.

இதன்படி 5 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட ஒருவருக்கு 21,000 ரூபா மேலதிகமாக ஓய்வூதியமாகச் செலுத்தப்படும்.

அதேநேரம் 10 ஆண்டுகள் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மூன்றில் இரண்டு பங்கு ஓய்வூதியமாகச் செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சையினை பாதிக்காமல் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை



நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குக் குறுகிய காலப்பகுதியே காணப்பட்டாலும் அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வெதுப்பக பொருள்களின் விலையைக் குறைக்க வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை



முட்டையின் விலை குறைவடைந்துள்ள நிலையில், அதன் பயனை மக்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு வெதுப்பக உற்பத்தியாளர்களிடம் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் –

“சந்தையில் முட்டை விலை குறைவடைந்துள்ள நிலையில், அதன் பயனை நுகர்வோருக்கு வழங்குமாறு அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம், அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் உட்பட உணவக உரிமையாளர்களிடம் நுகர்வோர் விவகார அதிகாரசபை நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தநிலையிலேயே, வெதுப்பக உற்பத்தியாளர்களிடம் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தமது கோரிக்கை விடுத்துள்ளது.

முட்டையின் விலை தற்போது 30 ரூபாவிற்கு குறைவடைந்துள்ளதுடன், அது வரவேற்கத்தக்க விடயமாகும்.

வெதுப்பக உற்பத்திகளை பொறுத்தவரையில் முட்டை பாரியளவு செல்வாக்குச் செலுத்துகிறது.

முட்டை விலை குறைவடைந்துள்ள போதிலும், உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க விலைக் குறைப்பை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடு வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்திடம் இல்லை.

எனினும், மனிதாபிமான ரீதியில் சிந்தித்து, முட்டை சேர்க்கப்படும் உணவுகளின் விலைகளை குறைத்து அதன் பயனை பொதுமக்களுக்கு வழங்குமாறு வெதுப்பக பொருள் உற்பத்தியாளர்களடம் கோருகின்றோம்.”– என்றார்.

# தேர்தல் வாக்களிப்புத் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு




எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமக்கு ஒதுக்கப்படும் வாக்களிப்பு நிலையத்தில் வாக்கைப் பதிவு செய்வதற்கு நியாயமான அச்சம் காணப்படுமாயின் அவ்வாறானவர்கள் பிறிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான அனுமதியைக் கோரமுடியுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனுமதி கோருபவர்கள் தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியுமென அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னதாக சம்பந்தப்பட்டவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும். அத்துடன் அவ்வாறான சகல தரப்பினர் தொடர்பான விவரங்களும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்." – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஒருவரின் பெர்மிட் கிளி நொச்சியில் 10 கோடி ரூபா விலை போன தான பேச்சு வடக்கில் அடிபடுவது வசந்த சமரசிங்கவுக்கு தெரியாது போலும்.

கொழும்பு காலிமுகத் திடலில் ஜனாதிபதி செயலகப் பகுதியை அண்டி நிறுத்தி விடப்பட்டிருக்கும் வாகனங்களின் அணி வகுப்பை வேறு வாகனத்தில் அந்தப் பகுதி ஊடாகப் பயணித்த போது அவதானித்தேன்.

எனக்கு 40 வருடங்களுக்கு முன்னர் 1985 – 86 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்படி யாழ்ப்பாணத்தில் பார்த்த வாகனக் கண்காட்சி ஒன்று நினைவுக்கு வந்தது.

எண்பதுகளில் ஆரம்பத்தில் தமிழர் தாயகத்தில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் தீவிரம் அடையத் தொடங்கிய காலத்தில் ஒரு விடயம் அரங்கேறியமை அக்காலகட்டத்தில் அங்கு வாழ்ந்தவர்களுக்கு நன்கு நினைவில் இருக்கும்.

ஒவ்வொரு இயக்கமும் தங்கள் பாவனைக்கு என்ற பெயரில் ஊரிலிருந்த பொதுமக்களின் அல்லது பொது நிறுவனங்களின் அல்லது அரசின் வாகனங்களை கொள்ளையடிப்பது வழமையான ஒன்றாகி வந்தது.

நல்ல தரத்தில் உள்ள யாருடைய வாகனமாவது வீதியில் பயணித்தால் அல்லது வீட்டு கராஜில் நிறுத்தப்பட்டு இருந்தால் அடுத்த சில நாள்களுக்குள் அது கொள்ளை போய் விடுவது தவிர்க்க முடியாத கட்டாயமாக இருந்தது.

ஏட்டிக்கு போட்டியாக இயக்கங்கள் வாகனங்களை சூறையாடிய இந்தப் பின்புலத்தில்தான் – என் நினைவு சரியென்றால் பெரும்பாலும் 1985இல் – திடீரென்று ரெலோ இயக்கத்திற்கு தடை விதிக்கும் அறிவிப்பை புலிகள் இயக்கம் விடுத்தது.

ரெலோவுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அதுவரை ரெலோவால் சூறையாடப்பட்டிருந்த வாகனங்கள் எல்லாம் மீட்டு எடுத்துவரப்பட்டு, புலிகளினால் யாழ் ஸ்டான்லி வீதிப் பகுதியில் இப்படித்தான் காட்சிக்கு அடுக்கப்பட்டிருந்தன. ரெலோவைக் கிண்டலடிக்கும் பதாகைகளும் அப்பகுதியில் தொங்க விடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றில் 'ஏறினால் கார்; இறங்கினால் பார்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தமையை வாசித்த நினைவு எனக்கு உண்டு.

இப்படி வரலாறு திரும்புவது வழமைதான்.

\+ + +

நேற்றுப் பிற்பகலுக்குப் பின்னர் சுமந்திரனின் தொலைபேசி வேலை செய்யவில்லை. சாணக்கியனையும் தொலைபேசியில் பிடிக்க முடியவில்லை.

சுமந்திரன் டெல்லிப் பயணம் போய் விட்டார் என்று கட்டுநாயக்கா வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

மலிந்தால் சந்தைக்கு வரும், பார்த்துக் கொள்ளலாம்.

எது, எப்படியென்றாலும் நாளை வவுனியாவில் நடக்கவிருக்கும் இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திற்கு இருவரும் பிரசன்னமாகி இருப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

# லிட்ரோ தலைவர் பதவி விலகினார்




லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் நாளை முதல் அமுலாகும் வகையில் பதவி விலகவுள்ளார் என அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு தேவையான சமையல் எரிவாயு கையிருப்பில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சின்னம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசியப் பொதுக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளான புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ரெலோவின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான என். சிறீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் அதன் மத்திய குழு உறுப்பினர்களான சிவநாதன் மற்றும் பார்த்திபன், ஜனநாயகப் போராளிகள் கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தி அதன் தலைவர் வேந்தன், செயலாளர் துளசி ஆகியோரும், சிவில் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிலாந்தன், யதீந்திரா, வசந்தராஜா, யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

இதன்போது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற கருத்தைப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சியினர் கோரியுள்ளனர். எனினும், ஒரு தரப்பு அரசியல் பிரமுகர்கள் அதனை விரும்பவில்லை.

ஒரு தரப்பினர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் குத்துவிளக்கு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் எனக் கோரியுள்ளனர். குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடுவதெனில் தாம் பொதுக் கட்டமைப்பாகப் போட்டியிடமாட்டோம் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்காத தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், சிவில் சமூகங்களின் கூட்டாகக் காணப்படும் தமிழ் மக்கள் பொதுச் சபையினர் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாகத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் எந்த விதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் அமைப்புகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையானது தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதா? இல்லையா என்ற முடிவை எடுப்பதற்குச் சில நாள்கள் அவகாசத்தைக் கேட்டுள்ளது.

இதையடுத்து நாளை சனிக்கிழமை தமிழ் மக்கள் பொதுச் சபையானது இது தொடர்பில் கூடி தமது முடிவை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# தமிழரசும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பொதுக் கட்டமைப்பில் போட்டியிட வேண்டும்

## அரியநேத்திரனின் விருப்பம் இது

(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியனவும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற அழைப்பை விடுப்பதாக தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு அவர் கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு சார்பில் களமிறக்கப்பட்ட எனக்கு வடக்கு கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் வாழக்கூடிய மக்கள் வாக்களித்திருந்தார்கள். இரண்டு இலட்சத்திற்கும் அதிக மான வாக்குகளைப் பெற்றிருந்தேன்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் கிழக்கு மாகா ணத்தை சேர்ந்தவருக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற பிரச்சாரம் எனக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் முன் வைக்கப்பட்டது. அந்த பிரதேசவாதம் தற்பொது முறிய டிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்காக வாக் களித்த அனைவருக்கும் நன்றிகள். பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என்று கூறியவரின் சொந்தத் தொகுதி யையே நாங்கள் கைப்பற்றியிருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றி ணைந்தது போல் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். இது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனா திராஜாவிடவும் கலந்தாலோசித்திருக்கின்றேன்.

தமிழ்த் தேசியத்தை தக்கவைக்க ஒரு குடையின் கீழ், ஒரு சின்னத்தில் போட்டியிடவேண்டிய தேவை இருக் கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகள் பிளவுபட்டு போட்டியிடுவ தால் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோண மலையில் தமிழ் பிரதிநித்துவத்தை இழக்க நேரிடும்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியனவும் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற அழைப்பை விடுக்கின்றோம்.

பதவிக்காக அல்லாமல் தேசியப் பற்றோடு ஒன்றி ணைவோம். நான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டேன். ஆனால் தமிழ்த் தேசிய கொள்கைக்காக பிரச்சாரம் செய்வேன். - எனத் தெரிவித்தார்.

# மதுக்கடையை மூடுமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்



மன்னார் பிரதான வீதியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையின் அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இந்தக் கோரிக் கையினை முன்வைத்துள்ளார்.

மேற்படி மதுபானசாலை பாடசாலைகள், ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ளமையானது அந்தப் பகுதி மக்களிடையே பாரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் கடந்த மாதம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஒற்றுமையின் அவசியம்

ஜனாதிபதித்தேர்தல்முடிவுகள், அரசியல் ஆதரவு அலை மாற்றங்களைப் பிரதிபலித்து நிற்கின்றன.

இந்தத் தேர்தலில் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி தனித்து 50 வீத வாக்குகளை எடுக்கவில்லை. அதனால் இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பின் பின்னர்தான் அதன் வேட்பாளரான அநுர குமார திஸநாயக்கவினால் வெற்றி பெற முடிந்தது.

ஆயினும், அதிகாரத்தில் இதுவரை இருந்த ஏனைய கட்சிகள், தரப்புக்கள் மீது பொதுமக்களுக்கு இருந்த அதிருப்தி, தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான அலையாகத் திரும்பியிருப்பது கண்கூடு.

சரியோ, பிழையோ அந்த அதிருப்தி தேசிய மக்கள் சக்தி அணியினருக்கு ஆதரவான அலையாகவும் திரும்பி வருகிறது. ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்டுள்ள இந்த எழுச்சி பொதுத் தேர்தலின் போது தென்னிலங்கையில் ஆழிப்பேரலை போல ஆர்ப்பரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் பிரதேசத்திலும் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி தென்படாமல் இல்லை. பொதுத் தேர்தலின் போது தென்னிலங்கையில் விஸ்வரூபமாக உருவெடுக்கக்கூடிய அந்த எழுச்சி, தமிழர் தாயகப் பகுதியிலும் தன் கைங்கரியத்தை காட்டக்கூடிய ஏது நிலைகள் உள்ளன.

சிறுபான்மை இனத்தவர்கள் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் பெரும்பாலும் பங்களிப்பை - ஆதிக்கத்தை - செலுத்தாத போதிலும், தெற்கில் எழும் ஆட்சித் துறை முறைகேடுகளுக்கு எதிரான பேரெழுச்சி, சிறுபான்மையினர் தரப்பிலும் ஊடுருவும் ஆபத்து உண்டு. அப்படி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக எழும் அலை சிறுபான்மையினர் தரப்புக்குள்ளும் ஆழ ஊடுருவி ஆதிக்கம் செலுத்தத் தொடங்குமானால், சிறுபான்மை மக்களின் தனித்துவ உரித்துக்களை பாதுகாக்கும் உரிமைக்குரல் அந்த எழுச்சிக்குள் அடங்கி நசுங்கிப் போய்விடும்.

ஆகவே, சிறுபான்மை இனக் கட்சிகள் இந்த அபாயத்தை உணர்ந்து உஷார் அடைய வேண்டிய காலம் இது.

தென்னிலங்கையில் எழுந்தடிக்கக்கூடிய அரசியல் அலை, தங்களுக்குள் ஊடுருவாமல் பார்த்துக் கொள்ளும் அதேசமயம், தங்கள் தனித்துவத்தையும் உரிமை கோரிக்கைகளையும் தொடர்ந்து வலியுறுத்தி நிற்கும் தரப்புகளின் கைகளை விட்டு சிறுபான்மை இனத்தவர்களுகான அரசியல் தலைமைத்துவம் நழுவிப் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த உரித்துக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் இனத்துவ அரசியலை முன்னெடுப்பது அல்லது கைக்கொள்வது சிறுபான்மை தரப்புகளுக்கு இப்போது அத்தியாவசியமாகின்றது.

சிறுபான்மை இனத் தரப்புக்கள் - குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் - தெற்கில் அடிக்கும் அரசியல் அலை மாற்றத்தில் தமது மக்களின் அரசியலும்சிக்கிவிடாமல்பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பொதுத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலஎல்லை நெருங்கி வரும் இச்சமயத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியல் தலைமைத்துவங்களும் மலையக தமிழர்களின் அரசியல் தலைமைத்துவங்களும் ஒன்றித்து - ஒரு கூட்டாக - பொதுத் தேர்தலை அணுகுவதைப் பற்றிச் சிந்தித்து, சிரத்தை எடுத்து, செயல்பட வேண்டும்.

தெற்கில் சுழன்றடிக்கும் அரசியல் போக்குக்கு தமிழர்களும் ஈடு கொடுப்பதற்கு இந்த ஒற்றுமை அவசியம்.






# மும்பைக்கு சிவப்பு எச்சரிக்கை; பாடசாலைகளுக்கு விடுமுறை

இந்தியாவின் மும்பையில் பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அனைத்து பாடசாலைகள் மற்றும், கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது.

மும்பை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு பொலிஸ் அறிவுறுத்தியுள்ளது.

மும்பை மற்றும் அதன் அருகிலுள்ள மாவட்டங்களான தானே, பால்கர் மற்றும் ராய்காட் ஆகிய பகுதிகளுக்கு இந்திய வானிலை ஆய்வு மையத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கன மழையால் மும்ப்ரா வீதியில் நேற்று முன்தினம் இரவு நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியில் 3 மணி நேரத்திற்கும் மேலாகப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக மும்பை விமான நிலையத்தில் உள்வரும் 14 விமானங்கள் தரையிறங்க அனுமதி வழங்கப்படாததால் திருப்பி அனுப்பட்டுள்ளன.

மேலும் பல ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மும்பையில் இன்றும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.











# 471 நாள்களுக்குப் பின் பிணையில் விடுதலையானார் செந்தில் பாலாஜி

## தி.மு.கவினர் உற்சாக வரவேற்பு

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு, உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியதைத் தொடர்ந்து, 471 நாள்களுக்குப் பின்னர் புழல் சிறையில் இருந்து நேற்று இரவு 7.10 மணிக்கு அவர் வெளியே வந்தார்.

சிறையின் வெளியே காத்திருந்த தி.மு.க. தொண்டர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக பதவி வகித்த செந்தில் பாலாஜி மீது அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துநர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு பணம் பெற்றுக்கொண்டு வேலை வாங்கிக் கொடுக்காமல் ஏமாற்றியதாக 3 மோசடி வழக்குகளை சென்னை மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் பதிவு செய்திருந்தனர். இந்த வழக்குகளின் அடிப்படையில் அவர் சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி அவரை அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி கைது செய்தனர். ஓகஸ்ட் மாதம், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஏற்கெனவே செந்தில் பாலாஜியின் பிணை மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், பிணை கோரி செந்தில் பாலாஜி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இதனிடையே, செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 61 முறை நீட்டிக்கப்பட்டது. பிணை கோரிய வழக்கில் வாதங்கள் நிறைவடைந்த நிலையில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ்.ஓஹா, அகஸ்டின் ஜார்ஜ் அமர்வு தீர்ப்புக்காக இந்த வழக்கை கடந்த ஓகஸ்ட் 12 ஆம் திகதி ஒத்திவைத்திருந்தனர்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் தமிழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உச்ச நீதிமன்றம் பல்வேறு நிபந்தனைகளுடன் நேற்று பிணை வழங்கியது. திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் அமலாக்கத் துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி ஆஜராகி கையெழுத்திட வேண்டும். சாட்சிகளை கலைக்கவோ, அவர்களை சந்தித்துப் பேசவோ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது. 25 லட்சம் ரூபாவுக்கு இருநபர் உத்தரவாதம் வழங்க வேண்டும், உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தது.

செந்தில் பாலாஜிக்கு உச்ச நீதிமன்றம், நேற்று காலை பிணை வழங்கியதில் இருந்தே, புழல் சிறையில் தி.மு.க. தொண்டர்கள் திரண்டனர். மேலும், கரூரில் தி.மு.க. தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்தும், இனிப்புகளை வழங்கியும், செந்தில் பாலாஜிக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வந்தனர். புழல் சிறையின் வெளியே, தி.மு.க. தொண்டர்கள் காலை முதல் இரவு வரை செந்தில் பாலாஜியின் வருகைக்காக கையில் கொடிகளை ஏந்தியபடி காத்திருந்தனர். பட்டாசுகளை வெடித்தும், இனிப்புகளை வழங்கியும்,கொட்டு மேளங்களை இசைத்தபடி, பல மணி நேரம் தொண்டர்கள் சிறை வளாகத்திலேயே காத்திருந்தனர்.

புழல் சிறையில் இருந்து சிரித்த முகத்துடன் வெளியே வந்தார். சிறைச்சாலையின் வெளியே காத்திருந்த தி.மு.க. தொண்டர்கள் அவருக்கு மலர்களைத் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். செந்தில் பாலாஜியை வாழ்த்தி முழக்கங்களை எழுப்பினர். சிறையில் இருந்து வெளியே வந்த செந்தில் பாலாஜிக்கு தி.மு.க. துண்டு அணிவிக்கப்பட்டது. செந்தில் பாலாஜியை வரவேற்க தி.மு.கவின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்ட கட்சியின் மூத்த நிர்வாகிகள் சென்றிருந்தனர்.

# பீகாரில் 'ஜிதியா' பண்டிகையில் புனித நீராடிய 37 குழந்தைகள் உட்பட 46 பேர் உயிரிழப்பு





இந்தியாவின் பீகாரில் 'ஜிதியா' பண்டிகையின் போது புனித நீராடிய 37 குழந்தைகள் உட்பட 46 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் 3 பேர் காணாமல் போயுள்ளனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களிற்கு இந்திய மதிப்பில் 4 லட்சம் ரூபா நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பீகார் மாநில அரசு அறிவித்துள்ளது.

'ஜிதியா' பண்டிகை என்பது பாரம்பரிய முறைப்படி கொண்டாடப்படுகிறது.

தங்கள் குழந்தைகள் உடல், நல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக தாய்மார்கள் விரதம் இருந்து கொண்டாடும் பண்டிகையாகும்.



# அதிகார வரக்கத்தால் தூக்கியெறியப்பட்ட நாயகன் மீண்டும் அதிகார நாயகனாக பணி அமர்த்தப்பட்டார்

**- ந.லோகதயாளன் -**

யாழ். மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபராக இருந்த நாகலிங்கம் வேதநாயகன் கோட்டாபய அரசின் காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அங்கஜன் இராமநாதன் எம்.பியின் முன்முயற்சியில் இடமாற்றப்பட்டபோது, அவர் பதவியை தூக்கி எறிந்துவிட்டு நேரத்துடன் ஓய்வு பெற்றுச் சென்றார். இன்று மாகாணத்திற்கே ஆளுநராகப் பதவியேற்கின்றார்.

அளவெட்டியை சொந்த ஊராக் கொண்ட வேதநாயகன் 29 ஆண்டு கால அரச சேவையாற்றிய நிலையில் ஓய்விற்கு 3 மாதகாலம் இருக்கும் போதே கோட்டபாய மற்றும் அங்கஜனால் அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டார்.

இவரது அரச பணிக்காலம் என்பது ஆரம்பம் முதல் இறுதிவரையுமே போர்க் களத்தில் பணியாற்றிய நிலைமைதான். ஆட்சித் தரப்புடன் ஒத்துச்செயற்படாமல், ஒழுங்கு விதிகளை இறுக்கமாகப் பின்பற்றி நின்றமையால் அப்போதைய அரசினால் தூக்கியெறியப்பட்டார்.

தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டி சாந்த வித்தியாலத்தில் ஆரம்பித்த சிறுவன் வேதநாயகன், தரம் 3 வரையும் அங்கும், அதன்பின்னர் தரம் 8 வரையில் அருணோதயாக் கல்லூரியிலும் கற்றமையோடு க.பொ.த. உயர்தரம் வரையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் கற்றுப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார்.

பல்கலைக் கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டப்படிப்பினை 1984இல் நிறைவு செய்த நிலையில் 1985ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற பின் 1985 முதல் 1986 வரை பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய சமயம் 1986 இல் ஆசிரிய சேவையில் இணைந்து 1991ஆம் ஆண்டு வரையில் மல்லாவி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதுதான் ஈழத்தில் இந்தியப்படையினர் நிலைகொண்டு போர் இடம் பெற்ற காலம்.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி ஆசிரிய சேவையில் இருந்து அரச நிர்வாகத்தில் பணியில் இணைந்து, 1991ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதிவரையில் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பயிற்சியை நிறைவு செய்தார். இக்காலப் பகுதியில் பொது முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் முதுமாணி ஆகிய பட்டங்களையும் பெற்றார்.

பயிற்சிக் காலத்தை நிறைவு செய்து அவர் வெளியேறிய அச்சமயம் 2 ஆம் கட்ட ஈழப் போர் உச்சம் பெற்றிருந்த வேளை. நெடுந்தீவுப் பிரதேச செயலகத்திற்கு 1991.05.04முதல் நியமிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் மண்டைதீவுபாலம் யாழ் கோட்டை மீதான தாக்குதல் காரணமாக முழுமையாக தகர்க்கப்பட்டிருந்தது. அதன் ஊடே பயணிக்க இரு பனைமரங்கள் மட்டுமே இணைப்பாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் துவிச்சக்கர வண்டியில் சென்று குமுதினிப் படகின் மூலம் நெடுந்தீவிற்கு பயணிக்க வேண்டும். அப்போதும் ஊர்காவற்றுறையில் படையினர் நிலை கொண்டிருந்தனர்.

குறிகட்டுவானில் புலிகள், நயினாதீவில் கடற்படையினரிடம் என இரு தரப்புச் சோதனையை தாண்டியே நெடுந்தீவு பயணிக்க வேண்டும். இத்தனை நெருக்கடியின் ஊடாக பயணித்து நெடுந்தீவில 5 மாதங்கள் பணியாற்றிய நிலையில் மீண்டும் தீவகம் முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டில் வந்தபோது சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு அவர் இடமாற்றப்பட்டார்.

பின்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார். 1996 முதல் 2002.12.31 வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய போதே 2003.01.01 முதல் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். மேலதிக செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் இரசநாயகம் 2007 ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

2007முதல் கிளிநொச்சி மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் இறுதி யுத்தம் காரணமாக பல நெருக்கடிகள், இடர்பாடுகள் உயிர் ஆபத்துக்களை கடந்தே பணியாற்ற

தொடர்ச்சி ▼

# அதிகார வரக்கத்தால் தூக்கியெறியப்பட்ட நாயகன் மீண்டும் அதிகார நாயகனாக பணி அமர்த்தப்பட்டார்



தொடர்ச்சி▲

வேண்டியிருந்தது. அதில் இருந்து தப்பி வவுனியா சென்றும் பணியாற்றினார். 2009ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரையில் பணியாற்றிய சமயம் இறுதி யுத்த காலத்தில் ஆற்றிய சேவைகள் தொடர்பான விசாரணை என்னும் பெயரில் பல தகவல்களை மறைக்கச் செய்வதற்காக 2009.07.20 அன்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டு போதிய விசாரணையோ அல்லது எந்தவிதமான குற்றச் சாட்டுகளோ இல்லாது தடுதது வைக்கப்பட்டிருந்த நிலையில் 2010 ஜனவரி 10 இல் விடுவிக்கப்பட்டு 2010.01.20 தொடக்கம் திரும்பவும் அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவ்வாறு அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் 2010ஆம் ஆண்டு ஜ/லை மாதம் மிகவும் நெருக்கடியான காலத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னார் மாவட்டத்திற்கு மாற்றபட்டு அதே ஆண்டு நவம்பர் மாதம் மீளவும் முல்லைத்தீவிற்கே இடமாற்றப்பட்டார.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றிய காலத்திலேயே 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பலரின் போட்டியின் மத்தியிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு – அதாவது தனது சொந்த மாவட்டத்துக்கு செயலாளராகத் தெரிவாகி – பதவியேற்றார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டமை முதல் மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் என்ன தேவை என்பதனை நன்கு அறிந்து அதே சிந்தனையாக இருந்தார். உறங்கும் நேரம் தவிர்ந்து ஏனைய நேரம் முழுமையாக மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் சிந்தித்த ஒருவர் என்றபட்டியயில் இடம் பிடித்தார்.

யாழ் மாவட்டத்தில் பணியாற்றிய சமயம் அரசியல் கட்சிகளை மட்டுமல்ல. சக பணியாளர்களில் கூட ஒரு சிலரை பகைக்க வேண்டி நேரும் எனத் தெரிந்தும் பொதுமக்கள் கோரும் கோரிக்கையை

நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்தமையினால் சிலர் பகையை எதிர்கொண்டார். அவர் நினைத்திருந்தால் அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் பகைக்காது சென்றிருக்கலாம். லஞ்சம் கோரியோரை இடமாற்றாதிருந்திருந்தால் – வேண்டுமென்றே மறுத்த வீட்டுத் திட்டத்தை நேரில் தலையிட்டு வழங்காதிருந்திருந்தால் – அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த பொருத்தமற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த தலையாட்டியிருந்தால் – எஞ்சிய 3 மாதங்களும் பதவியில் நீடித்திருக்கவும் முடியும். சக உத்தியோகத்தர்களிடமும் நன்றி பாராட்டியிருக்கவும் முடியும்.

இதற்கும் அப்பால் எந்த மக்களும், எப்போதும் மாவட்டச்செயலாளரைச் சந்திகக முடியும் என்ற நிலைமையை யாழ்ப்பாணத்தில் உருவாக்கினார்.

இவரின் காலத்தில்தான் சில அரசியல் கட்சிகள் அல்லது எதிர்பார்ப்பில் இருந்தோர் தமக்கு இவர் இசையவில்லை என்பதனால் இவர் மீது அரசியல் முத்திரையினையும் குத்தத் தவறவில்லை. இத்தனைக்கும் தாக்குப் பிடித்த நிலையிலேயே மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்தபோது கட்டாயமாக இடமாற்ற முயற்சிக்கப்பட்டதனால் பதவியை தூக்கியெறிந்து விடை பெற்றார்.

இவரது சேவைக் காலத்தில் அரச சேவை மட்டுமன்றி உதவி என நாடி வந்தவர்களிற்கு வாரி வழங்கிய இவரின் தனிப்பட்ட உதவிகள் இன்றும் தொடர்கின்றன. இதில் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 15 பேருக்கான மாதாந்தம் தலா3 ஆயிரம் ரூபா உதவி, அதேபோன்று பல்கலைக் கழகத்திற்கு தேர்வான 150 மாணவர்களிற்கு உதவி ஏற்பாடு என்பன குறிப்பிடக் கூடியவையாகும்.

அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டு, ஓய்வு பெறுவதற்கு முன் பதவியை தூக்கியெறிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவருக்க் இன்று நேரடி அரசியல் பதவி கிட்டியுள்ளது. இதிலும் சாதிப்பாரா அல்லது சோதனைகளை எதிர்கொள்வாரா என்பதே அவர் முன் உள்ள சவால்.

# இருப்பை பாதுகாக்கத் தமிழ்க்கட்சிகளை அணிதிரள அழைக்கின்றார் சிவமோகன்

(கே.வசந்தன்)

எதிர்வரும் தேர்தலில் சகல கட்சிகளும் ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் ஒன்றாகப் போட்டியிடவேண்டும் என முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.




வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எதிர்வரும் பொதுத் தேர்தலானது தமிழர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி இருப்பை காக்கவேண்டிய ஒரு தேர்தல். அந்த ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணம் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 11 பேர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

சகல கட்சிகளையும் உள்வாங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தமிழ்த் தேசிய அணியாக செயற்படுவதனை வலியுறுத்தியே அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. எனவே அனைத்து கட்சிகளும் ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ்த் தேசியகூட்டமைப்பாக தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் ஒன்றாக போட்டியிடவேண்டும். இது எனது சொந்தக் கருத்தாக இருந்தாலும் தமிழரசுக் கட்சியின் அதிகமானோரது நிலைப்பாடும் இதுவே.

இது தொடர்பான இறுதி முடிவை எமது கட்சியின் மத்தியகுழு விரைவில் எடுக்கும். மாவை சேனாதிராஜா அவர்கள் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து அதனை எமது மத்திய குழுவிற்கு அறிவிப்பார். மிக குறுகியகாலமே எமக்கு உள்ளது. எனவே விவேகமாக சிந்திக்கவேண்டும். பிரிந்து நின்று தேர்தலைச் சந்தித்தால் தமிழர்களது இருப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

நாடாளுமன்றுக்குப் புதியவர்கள் தேவை இளைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பது உண்மை. அதேநேரம் நாடாளுமன்றில் தமிழ்த் தேசிய இருப்பை தக்கவைப்பதற்கு ஆளுமையான அனுபவமுடைய மூத்தவர்களும் தேவை.

கடந்த காலங்களில் பங்காளிக் கட்சிகளுக்கு வன்னி மாவட்டத்தில் அதிகமான ஆசனங்கள் கொடுக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் கொடுக்கப்படாத நிலைமை இருந்தது. அதனை ஒற்றுமையாகவே நாம் செய்தோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவொரு கட்சிகள் மேலோங்கி இருக்கிறது. அது ஒரு தீர்க்கப்படமுடியாத பிரச்சினை அல்ல.

அத்துடன் தமிழர்களது விடயங்களை முன்னிலைப்படுத்தி கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களில் அரசாங்கத்துடன் இணங்கி செல்லவேண்டிய நிலைமையும் ஏற்படும். அது தொடர்பாக பரிசீலிப்போம்

இதேவேளை, மதுபான நிலையத்திற்கான அனுமதிப் பத்திரத்தை தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரங்களை இதுவரை நான் பார்க்கவில்லை. அது இன்றுவரை எமது கைகளில் கிடைக்கவில்லை. – என்றார்.

# பழைய முறையிலேயே விசா; ஜனாதிபதி அதிரடி தீர்மானம்

நேற்று நள்ளிரவு முதல் பழைய முறைப்படி விசா வழங்கும் நடைமுறையைச் செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்தது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனை நேற்று அறிவித்தது.

விசா வழங்கும் நடைமுறை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டமையால் குளறுபடிகள் ஏற்பட்டிருந்தன.

இதனை அடுத்து அந்தச் செயமுறையை இரத்து செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனால் விசா வழங்கலில் தாமதம் ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது பழைய முறைமையின் அடிப்படையிலேயே விசா வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.





# பெரும்போகத்திற்கான உர மானியத்தை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை

## மீனவர்களுக்கும் நிவாரணம்

2024 மற்றும் 2025 பெரும் போகத்தில் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் உர மானியத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க திறைசேரிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய ஹெக்டேயருக்கு இதுவரை வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மானியம் விவசாயிகளுக்கு செயற்றிறனுடனும் திறம்படவும் கிடைக்கும் வகையில் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சரியான விவசாய இடுபொருள் முகாமைத்துவத்திற்காக நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருள்களை வழங்குவதற்கும் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கேற்ப இரசாயன மற்றும் சேதனப் பசளை உள்ளிட்ட விவசாய இடுபொருள்களுக்கு மானியத்தை வழங்குவதற்கும் புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பின்னடைவை சந்தித்துள்ள மீன்பிடித் தொழிலை ஊக்குவித்து உற்பத்திச் செலவை குறைப்பதற்காக ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆழ்கடல் மற்றும் நாளாந்த படகுகளுக்கு மாதாந்த அடிப்படையில் எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவினால் திறைசேரிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவும் மீனவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படவுள்ளது.

மீன்பிடித் தொழிலை நிலைபேறான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், அதனூடாக மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலை, மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் என்பன புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கமைவாக தற்போது கடும் பின்னடைவை சந்தித்துவரும் மீன்பிடித் தொழிலை முன்னேற்றுவதற்கு நிதி மற்றும் தொழிநுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு உலக வங்கியின் ஒத்துழைப்பு

நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவிற்கு உலக வங்கிக் குழுமம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய வலயத்தின் தலைவர் மார்டின் ரயிஸர், சர்வதேச நிதி கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய உபதலைவர் ரிகார்டோ புலிட் ஆகியோர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பார்கள் என உறுதியளித்துள்ளனர்.




தற்போது இலங்கையின் பொருளாதாரம் மீளக் கட்டமைப்பதற்கு தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கள் அவசியம் என்பதை அறிந்துகொண்டுள்ளமையோடு, பொருளாதார வளர்ச்சி, செழுமை மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் ஒரே அளவான முக்கியத்துவத்தை கொண்டவை என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் மிகவும் பாதிக்கப்படும் நிலையிலிருப்போரின் தேவைகளை பூர்த்தி செய்வதை போலவே அனைத்தும் உள்ளடங்களான அபிவிருத்திக்கு இலங்கையின் புதிய நிருவாகத் தலைமைக்கு உலக வங்கிக் குழுமத்தின் ஆதரவை பெற்றுத்தர அர்ப்பணிப்பதாகவும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது!

இந்த நாட்டில் நுகர்வுக்கு போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அறிவித்தனர்.

மக்களுக்குத் தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அடுத்த வருடத்திற்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி என்ற வகையில் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய உதவித்திட்டத்தின் கீழ் மின்சக்தி அமைச்சிற்குக் கிடைத்துள்ள சூரிய சக்தி பெனல்களை விரைவில் பிரிவெனாக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்த ஜனாதிபதி, சூரிய சக்தி பெனல்களை வழங்குவதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடனுதவிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஒப்புதல் வழங்க ஒரு குழுவை நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்தி கிராமத்திற்கு பணம் கிடைக்கும் வகையிலான முறைமையொன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, இதன் ஊடாக பொருளாதாரத்தை விரைவாக பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். இந்தச் செயற்பாடுகளில் அதிகாரிகளுக்கு பெரும் பங்கு இருப்பதாகவும் அதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.








# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தாக்கம் செலுத்தும் விசா விவகாரம்

செப்டம்பர் மாதத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை, எதிர்பார்த்ததை விட குறைவாகவே காணப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விசா வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் அதற்கு காரணமாக இருக்கலாம் என அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதத்திலிருந்து விசா விநியோகிக்கும் நிறுவனம் மாறியமையால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அதனைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருந்தமையுடன் பல்வேறு சிரமங்களையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், 39 நாடுகளின் பிரஜைகளுக்காக விசா இன்றி சுற்றுலாவை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஒக்டோபர் மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதனூடாக 2024 ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலக்கை நெருங்க முடியும் எனவும் பிரியந்த பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார்.

செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 92,639 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளமையுடன் நாட்டிற்கு வருகை தந்துள்ள மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.45 மில்லியனைக் கடந்துள்ளது.



# காலிமுகத்திடலில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

காலிமுகத்திடல் உள்ளிட்ட கொழும்பின் சில பகுதிகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான வாகனங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்தவுள்ளன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான வாகனங்களை பார்வையிடுவதற்காக ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் ஆனந்த விஜேபால நேற்று பிற்பகல் அங்கு சென்றிருந்தார். இதன்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கடந்த அரசாங்கத்தினால் தமக்கு நெருக்கமானவர்கள் பல்வேறு ஆலோசகர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு சொகுசு வாகனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வாகனங்களே இவ்வாறு ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார்.

எனவே இந்த வாகனங்களை பாதுகாக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக, பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் வரிப்பணத்தின் மூலம் பெறப்பட்ட வாகனங்கள் இவை எனத் தெரிவித்த அவர், பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாப்பது தமது பொறுப்பெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த வாகனங்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மேற்படி வாகனங்களை மிகவும் பயனுள்ள வகையில் அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய அம்புலலன்ஸ் வாகனங்கள் இன்மை, கல்வித்துறை மேம்பாட்டுக்கான வாகனங்கள் இன்மை, பொலிஸாருக்கான வாகனங்கள் இன்மை உள்ளிட்ட விடயங்களை கவனத்திற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பணிப்பு

கிரேக்க முறிகள் கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐவரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டார்.

கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது கிரேக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்தமையின் ஊடாக அரசாங்கத்திற்கு 184 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்து லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் இந்த கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டதுடன், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் குற்றப்பத்திரிகையில் கையெழுத்திடப்பட்ட தினம் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த தொழினுட்ப கோளாறு காரணமாக பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர்.



தொழினுட்ப கோளாறை நிவர்த்தி செய்து ஆணைக்குழுவினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் தர்மசேன தீரசிங்க, தொன் வசந்த ஆனந்த சில்வா, சந்த்ர சிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன மற்றும் எம். ஏ. கருணாரத்ன ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறு தெரிவித்து நீதிமன்றத்தினால் நேற்று அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.




# நாடாளுமன்ற தேர்தலுக்கான அச்சுப் பணிகள் தொடங்கின

நாடாளுமன்ற தேர்தலுக்கான முதற்கட்ட அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வர்த்தமானி, விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏனைய அடிப்படை ஆவணங்களை அச்சிடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

அச்சுப் பணிகளுக்காக செலவாகும் பணம் இதுவரையில் மதிப்பிடப்படவில்லை.

எவ்வாறாயினும், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அனைத்து அச்சுப் பணிகளும் நிறைவடையும் என அரச அச்சகர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய வாக்குச்சீட்டுகள், உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் உள்ளிட்ட ஏனைய அச்சுப்பணி நடவடிக்கை வேட்புமனு தாக்கலுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளராக பரணீதரன்

## குருசாமியின் இராஜினாமாவை அடுத்து அரசியல் குழு தீர்மானம்






ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்த கே.ரி. குருசாமி, கட்சி தலைவர் மனோ கணேசனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் கட்சி மற்றும் கூட்டணி பதவிகளில் இருந்து சுயவிருப்புடன் இராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார். இதையடுத்து நேற்று கொழும்பில் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடிய ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு, இந்த இராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, காலியான பொதுச்செயலாளர் பதவிக்கு முருகேசு பரணிதரனை ஏகமனதாக நியமித்தது.

முருகேசு பரணிதரன் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் மற்றும் பிரச்சார செயலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் அதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணியினதும், தமிழ் முற்போக்குக் கூட்டணியினதும் அரசியல் குழு உறுப்பினராகவும் பதவி வகின்றார்.

மேலும், நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில், எதிர்வரும் 29ஆம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள தமிழர் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழுவில் கலந்து பேசி அங்கே எடுக்கப்படும் முடிவுகளுக்கு அமைய செயற்படுவது எனவும் தீர்மானிக்கபட்டது.



# நுவரெலியா – பதுளை பிரதான வீதி விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழப்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா பதுளை பிரதான வீதியில் மதுர கணபதி ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று புதன்கிழமை மாலை ஓட்டோவும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த ஓட்டோச் சாரதி நுவரெலியா கலுகெல பகுதியை சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த விபத்தில் ஓட்டோ பாரியளவில் சேதமடைந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.09.2024




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் / மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.09.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

